தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
தென்காசி.

ந.க.எண் : அ1/174/2022

நாள் : 18.05.2023.

**தென்காசி மாவட்டம், வட்டார இயக்க மேலாளர் காலியிடங்களுக்கு தகுதியான பெண் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி தேசிய தகவல் மையம் மூலம் (NIC)ல் செய்தி வெளியீடு**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், தென்காசி மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்குட்பட்ட வட்டாரங்களில் காலியாக உள்ள 2 வட்டார இயக்க மேலாளர்கள் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளதால் தகுதியான பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலியிடங்கள் விபரம் :-**

| வ.எண் | பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்கள் விபரம் | காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வட்டார இயக்க மேலாளர் காலியிட விபரம் | 2 |

விண்ணப்பதாரர்களின் தகுதிகள் விவரம் பின்வருமாறு.

**1.வட்டார இயக்க மேலாளர்கள் (Block Mission Manager) பணிக்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள் :**

1. ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி. மற்றும் MS Office-ல் குறைந்தபட்சம் 6 மாத காலம் கணிணி படித்ததற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். (கணிணி அறிவியல் அல்லது கணிணி பயன்பாட்டு அறிவியலில் பட்டப்படிப்பு முடித்த பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)
2. 01.01.2023 அன்று 28 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வாழ்வாதார இயக்கம் துறை சார்ந்த திட்ட செயல்பாடுகளில் குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர் தென்காசி மாவட்டத்திற்குள் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :

| |
|---|
| தமிழ்நாடுமாநிலஊரகவாழ்வாதாரஇயக்கம்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,<br>இரயில் நகர், மாவட்ட ஆட்சியரகம்,<br>தென்காசி - 627 811. |

விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கான
கடைசி நாள் : 02.06.2023.

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடத்தப்படும். எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் பெறப்படும் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்படும் தகுதியான நபர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்படுவர். பணித்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக ஒப்பந்தகாலம் புதுப்பிக்கப்படும்.

எனவே தென்காசி மாவட்டத்தில் , தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள மேற்குறிப்பிட்ட வட்டார இயக்க மேலாளர்கள் பணியிடங்களுக்கு தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை 02.06.2023-க்குள் அனுப்பி பயன்பெறுமாறு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.துரை.ரவிச்சந்திரன்.,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

18.5.2023

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
தென்காசி மாவட்டம்.

18/5/23